செ.வெ.எண்: 36/ஏப்ரல் நாள்: 30.04.2016

## இராமநாதபுரம் மாவட்டம்

## சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவுலுர்களுடனான ஆலோசனைக்கூட்டம்

## மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 29.04.2016 அன்று தேர்தல் பொது பார்வையாளர் திரு.இரமேஷ் வர்மா,இ.ஆ.ப., அவர்கள் (இராமநாதபுரம், முதுகுளத்தூர்) முன்னிலையில் மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் முனைவர் ச.நடராஜன், இ.ஆ.ப.,, அவர்கள் தலைமையில், சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:-

நடைபெறவிருக்கும் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016 வாக்குப்பதிவு நாள் நெருங்குவதை முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள நான்கு சட்டமன்ற தொகுதிகளிலும் தேர்தல் வாக்குப்பதிவிற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மேற்கொண்டு தயார் நிலையில் இருந்திட வேண்டும். சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ல் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத்தாக்கல் கடந்த ஏப்ரல் 22-ம் தேதி தொடங்கி 29ம் தேதி வரை நடைபெற்றுள்ளது. மாவட்டத்திலுள்ள 4 சட்டமன்ற தொகுதிகளிலும் மொத்தம் 130 வேட்பு மனுக்கள் வரப்பெற்றுள்ளன. தொடர்ந்து வேட்பு மனுக்களின் சரிபார்ப்பு பணிகளை மேற்கொண்டு இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளபடி மே-2 அன்று இறுதி வேட்பாளர் பட்டியலை அறிவித்திட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

மேலும், வேட்பாளர்களின் தேர்தல் செலவினங்களை முறையாக கண்காணித்து சட்டமன்ற தொகுதி வாரியாக அறிக்கை சமர்பித்திட நடவடிக்கை மேற்கெள்ள வேண்டும். வங்கிகளில் சந்தேகப்படும்படியாக பணம் பரிவர்த்தனைகள் ஏதேனும் இருப்பின் அவற்றை முறையாக கண்காணித்து தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். மதுபானக் கடைகளில் சந்தேகப்படும்படியாக அதிகளவிலான விற்பனை ஏதேனும் இருப்பின் அவற்றையும் முறையாக கண்காணித்திட வேண்டும். வர்ககுச்சாவடி மையங்களில் தேவையான அடிப்படை வசதிகள் அனைத்தையும் எவ்வித குறைபாடுகளுமின்றி ஏற்படுத்திட வேண்டும்.

தேர்தல் பணியில் வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு நான்கு கட்ட பயிற்சிகள் வழங்க திட்டமிடப்பட்டு அதில் முதற்கட்ட பயிற்சி வகுப்புகள் நிறைவு பெற்றுள்ளது. மீதமுள்ள மூன்று பயிற்சி வகுப்புகளிலும் அனைத்து வாக்குச்சாவடி அலுவலர்களும் தவறாது கலந்து கொண்டு பயிற்சி வகுப்பினை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். தேர்தல் பணியில் ஈடுபடும் அலுவலர்கள் விழிப்புடன் பணியாற்றி எவ்வித பாரபட்சமுமின்றி இராமநாதபுரம் மாவட்டத்தில் சட்டமன்ற பொதுத் தேர்தல் 2016-ஐ அமைதியான முறையில் நடத்திட அற்பணிப்பு உணர்வுடன் பணியாற்றிட வேண்டுமென மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவருமான முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், கூடுதல் தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அலிஅக்பர், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, பரமக்குடி தேர்தல் நடத்தும் அலுவலர்/ சார் ஆட்சியர் டாக்டர்.கி.சு.சமீரன், இ.ஆ.ப., இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (வருவாய் கோட்டாட்சியர்) திரு.ராம்பிரதீபன், திருவாடானை சட்டமன்ற தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அலுவலர் (மாவட்ட வழங்கல் அலுவலர்) திரு.இராஜசேகரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.சாந்தா உட்பட அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**